PRANAV JOURNAL OF FINE ARTS
ISSN: 2582-9513

# திருக்கோவில் வளர்த்த இசை மற்றும் நாட்டியம்

அ.சுஜாதா மற்றும் முனைவர்.வெ.பாலா
ஸ்ரீ சத்குரு சங்கீத வித்யாலயம்
இசைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையம்
மதுரை-2
chinnamanur.sujatha@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்:**

ஆலய வழிபாடுகளில் இசை , நாட்டியம் இடம்பெற்ற செய்திகள் , அவற்றின் கல்வெட்டு குறிப்புகளை எடுத்து இயம்புவது இவ்வாய்வின் நோக்கமாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது.

**முதன்மைச் சொற்கள்** : மரபுக் கலைஞர்கள் , சங்க இலக்கியங்கள் , நாயன்மார்கள், ஆழ்வார்கள், சிற்பங்கள், கல்வெட்டுகள், இசைத்தூண்கள்.

**முன்னுரை:**

பரந்து விரிந்த நம் பாரதத்தில் கலைகள் ஒரு உன்னதமான இடத்தைப் பெற்றுள்ளது என்றால் அது மிகையாகாது . அந்தக் கலைகளில் சிறப்பு வாய்ந்ததும் நுட்பமானதும் இசை மற்றும் நாட்டியமாகும்.

பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங் கலந்துனக்கு நான் தருவேன்-கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ்மூன்றுந் தா

என்று ஔவையார் பாடிய அகவலின்படி சங்கத் தமிழ் மூன்றாகிய இயல், இசை , நாடகம் என்னும் முத்தமிழையும் வளர்த்த நாடு நம்

பாரதம்.தமிழ்நாட்டை ஆண்ட மூவேந்தர்கள் கலைகளை வளர்ப்பதிலும் , அதில் தேர்ந்த வல்லுனர்களையும் ஆதரித்து வந்தனர் . கோவில்களில் நடைபெறும் முக்கிய நிகழ்வுகள்மற்றும்திருவிழாக்காலங்கள் அதுமட்டுமல்லாது நித்யபடி பூஜைகள் சோடசாங்கத்தில் கீதம் , வாத்தியம், நிருத்தியம் இடம் பெற்றிருந்தன . தொல்காப்பியம் , சிலப்பதிகாரம் போன்ற காப்பியங்களில் இசை மற்றும் நாட்டியத்திற்குமுக்கிய இடம் வகிக்கின்றது . இசை மற்றும் நாட்டிய கலைகளில் சிறந்து விளங்கியதை கல்வெட்டுகள் , சிற்பங்கள் , ஓவியங்கள்மற்றும்கட்டிடக்கலை மூலம் அறியலாம்.

**இசைத்தமிழ்:**

1. வரலாறு தொடங்கிய காலம் முதல் ஏற்பட்டது தமிழிசையாகும்.பண்டைக் காலம் முதல் அதாவது தொல்காப்பிய காலம் தொடங்கி சங்க காலம், சிலப்பதிகாரக் காலம் போன்ற தமிழ் நூல்களில் இசைத் தமிழ் செய்திகள் அடங்கி இருப்பதைக் காணலாம்.
2. அதன்பின் அறுபத்தி மூன்று நாயன்மார்கள் திருஞானசம்பந்தர் தொடங்கி தெய்வச் சேக்கிழார் வரை பாடிய பன்னிரு திருமுறைகள், மாணிக்கவாசகரின் திருவாசகம் மற்றும் திருக்கோவையார் மற்றும் பன்னிரு ஆழ்வார்கள் காலம் வரையிலும் பாசுரங்கள் பாடிய காலம் எனலாம்.
3. அதன்பின் பேரருளாளர் அருணகிரிநாதர் திருப்புகழ் பாடியுள்ளார் . இவை அனைத்தும் தமிழில் பாடப்பட்ட இசையே ஆகும்.

PRANAV JOURNAL OF FINE ARTS
ISSN: 2582-9513

**பண்டைக்காலம்:**

பண்டைய காலத்தில் இசைக்கென்றே வாழ்ந்தவர்கள் பாணர்கள்என்று சொல்லப்படுகிறார்கள். சங்க நூல்களில் பல இசைக் குறிப்புகளை காணலாம். இசையையும் , நடனத்தையும் உணர்த்தும் நூல்கள் சிலப்பதிகாரம். சிலப்பதிகாரத்தில் பலவகை இசைப்பாட்டுக்களைஅடக்கியுள்ளன. இசைப் பாடல்கள் வரிப்பாடல்கள் எனப் பெயர் பெறுகின்றன . சிலப்பதிகாரத்தில் அரங்கேற்றுக்காதை யில் நாட்டியத்தைப் பற்றிய செய்திகள் உணர்த்துகின்றன . இசைமற்றும் நாட்டியம் பற்றிய செய்திகள் கடல் போல் பரந்து கிடக்கின்றன.

**கல்வெட்டுகள் மற்றும் சிற்பங்கள்:**

குடிமியான்மலை சாசனத்தில் இசைபற்றிய செய்திகள் உள்ளன திருமயத்திலும்ஒரு இசைக் கல்வெட்டு பொறிக்கப்பட்டிருந்தது . தாராசுரம்ஐராவதீஸ்வரர் கோயில் பலிபீடத்தில் மண்மூடியிருந்த ஏழு படிகள் சப்தஸ்வர படிக்கட்டுகள் என்று கூறுவர் . அதுபோலமதுரை அழகர்கோவில் , சுசீந்திரம் ஸ்ரீ தாணுமாலய சுவாமி திருக்கோயில் , திருக்குறுங்குடி அழகிய நம்பிராயர் திருக்கோயில் , ஆழ்வார் திருநகரி (திருக்குருகூர் ) ஆதிநாதன் திருக்கோயில் , தாடிக்கொம்பு சௌந்தரராஜ பெருமாள் கோயில்,திருநெல்வேலி நெல்லையப்பர் கோயில் முதலான இடங்களிலும் சப்தஸ்வரங்கள் ஒலிக்கின்ற இசைத்தூண்கள் மண்டபங்களில் அமைக்கப்பட்டுள்ளன . கும்பேஸ்வரர் கோவிலில் கல்லாலான நாதசுர வாத்தியம் குறிப்பிடத்தக்கது .

ஆழ்வார்திருநகரியில் உள்ள கோயிலில்மாவு கல்லினால் ஆன நாத சுரமும் , திருநெல்வேலி ஜில்லாவில் நாங்குநேரியில் செண்பகராமநல்லூர் கோயிலில் ஒரு கல் நாத சுரம் உள்ளது . இந்தக் கல் நாத சுரத்தை நன்கு பயிற்சி செய்து , மிகவும் அழுத்தமாக வாசிக்கும்அனுபவம் உள்ளவர்கள் இதைஇசைத்தால் "எக்காளத்தின் " நாதத்தையும் சங்கின் ஒலியையும் கேட்கலாம் .தில்லை சபாநாயகர் கோயிலின் கிழக்குக் கோபுர வாயிலில் 108 கரணச் சிற்பங்கள் காணப்படுகின்றது.

**நாகசுரம்:**

நாகசுரம் என்பது காற்று கருவியாகும் .'மங்கல இசைக் கருவி ' என்றும் 'ராஜ வாத்தியம் ' என்றும் அழைப்பர். திருக்கோவில்களில் பூஜா காலங்களில் நாகசுர இசைக் கலை முக்கிய பங்கு வகிக்கின்றது . நித்ய கால பூஜைகள், மங்கல இசை என போற்றப்படும் நாகசுர இசையோடு தான் சைவ வைணவ திருத்தலங்களில் துவங்குகின்றன . அதிகாலைப் பொழுதில் இறைவன் திருப்பள்ளி எழுச்சியில் பூபாளம் , பௌளி ஆகிய ராகங்களில் துவங்கி , பின்பு வளர்ந்து பின் மீண்டும் இரவில் திருப்பள்ளி செல்லும் பொழுது நீலாம்பரி, ஆனந்த பைரவி ராகங்களுடன் நித்திய கால பூஜை முடிவுறும் . அதை மரபாகக் கொண்டு இன்றளவும் திருக்கோவில்களில் நடைபெற்று வருகின்றது .சங்க இலக்கியங்களில் மங்கல இசைக் கருவியை பெருவங்கியம் என்று நாகசுர இசைக்கருவியை அழைப்பர். ஆலயங்களில் வாசிக்கும் முறையை மரபிசை வடிவங்களாக தொகுத்துள்ளனர். இதில் முக்கியமான இடம்

பெறுவது மல்லாரி ஆகும். தீர்த்த மல்லாரி , தேர் மல்லாரி , தளிகை மல்லாரி , கும்ப மல்லாரி என்று அந்தந்த சமயத்திற்கு ஏற்ப வாசிப்பது மரபாகும்.உற்சவ காலங்களில் சுவாமி புறப்பாட்டின் போதும் , கும்பாபிஷேக காலங்களிலும் நாகசுர , தவில் இசை முக்கிய இடம் வகிக்கின்றது.

**தவில்:**

பஞ்சமரபு என்ற கடைச்சங்க நூலில் 29வகையான தோல் கருவிகளின் பெயர்கள் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் தனிப்பெரும் இசைக்கருவியாக திகழ்வதுதவில்ஆகும். இதனை"மங்கல வாத்தியம்" என்றும் "மேளம்" என்றும் அழைப்பர். நாகசுரவாத்தியத்திற்குரிய தனிக்கருவியாகும். பெரிய மேளம் என்றும்நாகசுரம் , தவில் குழுவினரை அழைப்பர். தவில் வாத்தியமும் ஆலய வழிபாட்டில் முக்கிய இடம் வகிக்கின்றது .நாகசுர நிகழ்ச்சியில் தவில் வாசிக்க தொடங்கிய பின்பு நாகசுரம் வாசிப்பர் என்பது குறிப்பிடத்தக்கது.

**ஆடல் கலை:**

ஆய கலைகள் அறுபத்தி நான்கில் நாட்டியக் கலை ஒரு அருமையான கலை வடிவமாகும். சிவபெருமான் உலகை ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்களையும் புரிந்துஆனந்ததாண்டவம் ஆடுவதால் சிற்றம்பலம் என்ற பெயரில் சிதம்பரத்தில்தாண்டவ மூர்த்தியாக அருள்பாலித்து வருகின்றார் . கூத்தபிரான், நடராஜர் , ஆடல்வல்லான் என பல நாமங்களில் அழைக்கின்றோம். அப்படிப்பட்ட உன்னதமான நாட்டியத்தை நாமும்

ஆடும் பொழுது அளவில்லா ஆனந்தமும், பெருமையும் அடைகின்றோம். வேதம் பயின்று வேள்விகள் பல செய்து அடையக்கூடிய பயனை நாட்டியமாடியே பெறலாம் .வேதத்திற்கு இணையானது நாட்டியம்என்றுபரதமுனிவர் நாட்டிய சாஸ்திரத்தில் குறிப்பிடுகின்றார் . நாயன்மார்களும், ஆழ்வார்களும் திருக்கோவில்களில் இசையையும் , நடனத்தையும் வளர்த்துள்ளனர் . 16 பிரிவுகளை கொண்ட ஷோடசோபசாரத்தில் இசையும் , இசைக் கருவிகளும் 14வது அம்சமாகவும்,நடனம் 15-வது அம்சமாகவும் திருக்கோவிலில் இடம்பெற்றுள்ளது. இந்து சமய வழிபாட்டில் நடனம் ஒரு முக்கிய இடத்தைப் பெற்று இருக்கின்றது.

கி.பி பத்தாம் நூற்றாண்டில் தஞ்சையை ஆண்ட இராஜராஜ சோழ மன்னர் நாட்டியத்திலும், இசையிலும் சிறந்து விளங்கிய நானூறு ஆடல் மகளிரை பணியமர்த்தி தஞ்சை பெரிய கோயிலில் ஆட வைத்ததாகவும் , அவர்களை தளிச்சேரிப் பெண்டுகள் என்றழைக்கப்பட்டனர் . அவர்களுக்கு வீடும், நிலமும் மானியமாக கொடுத்து அவர்களை சிறப்பான முறையில் வளர்த்து ஆதரித்து வந்துள்ளார்.

திருக்கோவில்களில் நடைபெறும் பூஜைகளில் ஆடல் மகளிர் தவறாது பங்கேற்று தனது சேவையை செய்வது வழக்கமாகும் . பிரம்மோற்சவ காலங்களில் நவசந்திகளிலும் அந்தந்த சன்னிதியில் ஆகம முறைப்படி நிருத்தம் ஆடுவர் . சுவாமி புறப்பாடாகிதேர் நிலைக்கு வந்ததும் பஞ்சமூர்த்தி கவுத்துவம் , மேலவீதியில் பதங்களும் , கீழவீதியில் தேவாரப் பாடல்களும் , பள்ளியறைவழிபாட்டில் லாலி , ஊஞ்சல்

பாடல்களுக்கு அபிநயம் பிடித்து ஆடுவர் . நவசந்தி கவுத்துவம் , சுத்த நிருத்தம், புஜங்கத்ராசிதம் , குறவஞ்சி போன்றவைகள் ஆலயங்களில் ஆடப்பட்டு வந்தன. நாட்டிய ஆசான், முட்டு காரர், பாடுபவர் ஆகியோர் அடங்கிய குழுவை சின்னமேளம் என்றும் நட்டு முட்டு என்றும் அழைப்பர். தெப்பத் திருவிழாவில் முதல் சுற்றில்நாகசுர தவில் நிகழ்ச்சியும், இரண்டாவது சுற்றில் நாட்டியமும் , மூன்றாவது சுற்றில் ஓதுவார்களின் திருமுறை பாடல்களும் இடம் பெறும்.

**பன்னிரு திருமுறை பாடிய அருளாளர்கள்:**

| திருமுறை | பாடியவர்கள் | பாடல் எண்ணிக்கை |
|---|---|---|
| முதலாம் திருமுறை | திருஞானசம்பந்தர் | 1,469 |
| இரண்டாம் திருமுறை | திருஞானசம்பந்தர் | 1,331 |
| மூன்றாம் திருமுறை | திருஞானசம்பந்தர் | 1,358 |
| நான்காம் திருமுறை | திருநாவுக்கரசர் | 1,070 |
| ஐந்தாம் திருமுறை | திருநாவுக்கரசர் | 1,015 |
| ஆறாம் திருமுறை | திருநாவுக்கரசர் | 981 |
| ஏழாம் திருமுறை | சுந்தரர் | 1,026 |
| எட்டாம் திருமுறை | மாணிக்கவாசகர் | 1,058 |
| ஒன்பதாம் திருமுறை | 9 ஆசிரியர்கள் | 301 |
| பத்தாம் திருமுறை | திருமூலர் | 3,000 |

| | | |
|---|---|---|
| பதினொன்றாம் திருமுறை | 12 ஆசிரியர்கள் | 1,385 |
| பன்னிரண்டாம் திருமுறை | சேக்கிழார் பெருமான் | 4,286 |
| | **மொத்தம்** | **18,280** |

**பன்னிரு திருமுறைகளில் பஞ்சபுராணம்:**

சிவாலயங்களில் ஆறுகால பூஜைகளின்போது பஞ்சபுராணம் ஓதுதல் நிகழ்கின்றது. தேவாரம் , திருவாசகம் திருக்கோவையார் , திருவிசைப்பா , திருப்பல்லாண்டு, திருத்தொண்டர்புராணம் ஆகிய 5 பகுதிகளில் இருந்தும் ஒரு ஒரு பாடல் மட்டும் பாடப்படுவது பஞ்சபுராணம் . திருச்சிற்றம்பலம் என்று துவங்கி விநாயகர் துதியுடன் ஆரம்பித்து , அதன் பின் பஞ்சபுராணம் பாடி , திருப்புகழ் பாடி , வான்முகில் வழாது பெய்க என்ற கந்தபுராணம் பாடி நிறைவு செய்வர் .தேவாரம் மற்றும் திருவாசகம் பாடுபவர்களை 'ஓதுவார்கள்' என்று அழைப்பர்.

**இறைவனும் இசையும்:**

ஓம் என்னும் பிரணவ நாதமே இசையாகும் . அந்த நாத ரூபமான இறைவன் சிவபெருமான் ஆவார். "நமச்சிவாய வாழ்க நாதன் தாழ்வாழ்க" என்னும் சிவபுராணப்பாடல் வரியும் ,உய்ய என்உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற மெய்யா எனும் மாணிக்கவாசகர் திருவாசகத்தில் நாத வடிவானவன் இறைவன் என்பது புலப்படுகின்றது.

மாசில் வீணையும் …………ஈசன் எந்தை இணையடி நிழலே எனத்தொடங்கும் திருநாவுக்கரசர் தேவாரத்தில்இறைவனாகிய திருவடி

PRANAV JOURNAL OF FINE ARTS
ISSN: 2582-9513

நீழல் குற்றமற்ற நாதமான வீணையின் இசை போன்றது எனவும் தமிழோடு இசை பாடல் மறந்தறியேன் எனவும் பாடியுள்ளார்.ஏழிசையாய் இசைப்பயனாய் எனவும், யாழ் முயன்றிருக்கும் ஆரூர் அப்பனே எனவும் , சுந்தரர் தேவாரத்திலும் ,பண்ணியாவும் மறை பாடலினான் எனும் பாடலிலும் , பண்ணார் மறைபாட இதுபோன்ற பல பாடல்களில் இசையின் மேன்மை பற்றியும் திருஞானசம்பந்தர்பாடியுள்ளார்.

**<u>பன்னிரு ஆழ்வார்களும் அவர்களின் பாசுரங்களும்:</u>**

சைவ சமயத்தை வளர்க்க 63நாயன்மார்கள் போன்று , வைணவ சமயத்தை வளர்த்தவர்கள் பன்னிரு ஆழ்வார்கள் . திருமாலின் பெருமைகளை பாடிய கி .பி 6ம் நூற்றாண்டில் தோன்றிய பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார் , பேயாழ்வார் ஆகிய மூவரும் சமகாலத்தவரும் முதல் ஆழ்வார்கள் ஆவர்.

| ஆழ்வார்கள் | பாசுரங்கள் | இயற்றிய நூல்கள் |
|---|---|---|
| பொய்கையாழ்வார் | 100 | முதல் திருவந்தாதி |
| பூதத்தாழ்வார் | 100 | 2-ம் திருவந்தாதி |
| பேயாழ்வார் | 100 | 3-ம் திருவந்தாதி |
| திருமழிசையாழ் வார் | 216 | திருச்சந்தவிருத்தம்120, நான்முகன்திருவந்தாதி 96 |
| மதுரகவியாழ்வார் | 216 | கண்ணின் நுண் சிறுத்தாம்பு |
| நம்மாழ்வார் | 1296 | திருவாய்மொழி |

PRANAV JOURNAL OF FINE ARTS
ISSN: 2582-9513

| | | |
|---|---|---|
| குலசேகரர் | 105 | பெருமாள்திருவாய்மொழி |
| பெரியாழ்வார் | 473 | திருப்பல்லாண்டு,<br>பெரியாழ்வார்திருமொழி. |
| ஆண்டாள் | 173 | திருப்பாவை 30,திருமொழி 140 |
| தொண்டரடி பொடியாழ்வார் | 55 | திருமாலை,திருப்பள்ளியெழுச்சி,திருமறை திருமலை திருப்புகழ்ச்சி |
| திருப்பாணர் | 10 | அமலான் ஆதிபிரான் |
| திருமங்கை | 1361 | ஆறு அங்கங்கள் |

**அரையர் சேவை:**

ஆழ்வார்கள் அருளிச் செய்யப்பட்ட 4000 திவ்ய பிரபந்தங்களை வைணவ கோவில்களில் சேவிப்பது வழக்கமாகும் . பிரபந்தம் சேவிக் கையில் பக்கவாத்தியம் எதுவும் இடம்பெறுவதில்லை . கைத்தாளம் மட்டுமே இதில் இடம் பெறும் அரையர்கள் இறைவனுக்குச் செய்யும் சேவை அரையர் சேவை எனப்படும் .அரையர்எனும் பட்டப்பெயர் கொண்ட வைணவ அந்தணர் குடும்பத்தினர் பரம்பரையாக செய்து வரும் காரணத்தால் அரையர் சேவை என்றழைக்கப்படுகின்றது . கையிலேதாளம் வைத்துக் கொண்டு பிரபந்தங்களை பாடி விண்ணப்பிப்பது மட்டுமின்றி , அபிநயம் செய்தும் ஆங்காங்கே பாசுரங்களுக்கு விளக்கம் கூறுவது வழக்கம். ஸ்ரீரங்கம், ஸ்ரீ வில்லிபுத்தூர், ஆழ்வார்திருநகரி ஆகிய தலங்களில் நாலாயிர திவ்ய பிரபந்தத்தின் பாசுரங்களுக்கும் விளக்கம் கூறியும் , அபிநயம் செய்தும் அரையர் சேவை இன்றும் நடைபெறுகின்றது . விழாக்காலங்களில் எடுத்துச்செல்லப்படும் உற்சவரின் முன்பே அரையர் சேவை

PRANAV JOURNAL OF FINE ARTS
ISSN: 2582-9513

நடைபெறும். நாலாயிரம் திவ்யப் பிரபந்தப் பாசுரங்களை வைணவ பக்தர்கள் பாடிக்கொண்டே முன்னாள் செல்வர். அவர்களுக்குப் பின்னால் உற்சவ மூர்த்தியின் திருவீதி உலா தொடர்ந்து வருவது மரபு.“பைந்தமிழ்ப் பின்சென்ற பச்சைப் பசும் கொண்டலே ” என்று குமரகுருபர சுவாமிகள் மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழில் பாடியுள்ளார். நம்மாழ்வார் பாசுரத்தில் “அடியேன் செய்யும் விண்ணப்பம் ” என்று பாடியுள்ளார்.

**முடிவுரை:**

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்பது ஔவையார் வாக்கு. வழிபாட்டு முறைகளில் பல விதம் இருந்தாலும் , இசை மற்றும் நாட்டியத்தால் இறைவனை வழிபடுவது அந்த இறைவனை மகிழ்விப்பது ஆகும். நாத உபாசனையால் ராமனை நேரில் கண்டவர் தியாகராஜர். தேனென இனிக்கும் திருவாசகம் பாடி இறைவனுடன் இரண்டறக் கலந்தவர் அருளாளர் மாணிக்கவாசகர். மதுரையை ஆண்ட ராஜசேகர பாண்டியன் வேண்டுகோளுக்கு இணங்க கால் மாறி ஆடி காட்சியளித்தார் நடராஜப்பெருமான்.

இசை மற்றும் நடனக் கலைஞர்கள் தங்களது மூதாதையர்கள் பின்பற்றிய வழியில் இசை மற்றும் நாட்டியக் கலையை இன்றளவும் வளர்த்தும், பாதுகாத்தும் வருகின்றனர். இறை இன்பம் பெறவும் , இறைவனை அடையவும் இசையும் , நடனமும் ஒரு ஆன்மீக பாலமாக அமைகின்றது. "திருக்கோவில் வளர்த்த இசை மற்றும் நாட்டியம்" எனும் பண்டைக்கால மரபினை இசை கற்கும் மாணவர்கள் அறிந்துகொள்ளும்

வகையில் இசைத்தமிழ் ,நாகசுரம், தவில்,நாட்டியம், பன்னிருதிருமுறைகள், , பன்னிரு ஆழ்வார்கள் பற்றிய குறிப்புகள் இவ்வாய்வுக் கட்டுரையில் சுருங்கத் தரப்பட்டுள்ளது.

**துணைநூற்பட்டியல்:**


1. **தெய்வீக ஆடற்கலை (பரதநாட்டியம்)** -1987 பத்மஸ்ரீ.வழுவூர்.பி .ராமையா பிள்ளை.பக்கம் எண்: 7
2. **திருக்கோயில் நுண்கலைகள்** -டாக்டர்.கே.ஏ.பக்கிரிசாமி பாரதி -2004 பக்கம் எண்: 30, 31, 59, 86, 87, 131, 134, 172, 174, 190, 191
3. **ஔவையார் நல்வழி** -நாவலர் மு .வேங்கடசாமி நாட்டார் -2010 பக்கம் எண்:11, 12
4. **தென்னகஇசை வளர்ச்சியில் திருப்பாம்புரம் இசைமரபு** (முனைவர் பட்ட ஆய்வேடு- 2019 ) அ.விஜய்கார்த்திகேயன்அண்ணாமலை பல்கலைக்கழகம் - இசைத்துறை பக்கம் எண்: 28, 30
5. **ஓதுவாமூர்த்திகள் வளர்த்த பண்ணிசை மரபு** தி.பாலச்சந்தர் (முனைவர் பட்ட ஆய்வேடு- 2019 )அண்ணாமலை பல்கலைக்கழகம்-இசைத்துறை , பக்கம் எண்: 32, 38
6. https://tamil.examsdaily.in/tnpsc-saivam-vainavam-study-materials-in-tamil-27